## தரமான விதை… நிறைவான மகசூல்…

## 10.07.2013





எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம்...

**மானாவாரிக்கு ஏற்ற திண்டிவனம் விதைகள்..!**

தமிழ்நாட்டைப் பொருத்தவரை எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி மற்றும் விதை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் ' திண்டிவனம் எண்ணெய்வித்துகள் ஆராய்ச்சி நிலையம்'.திண்டிவனத்தில் இருந்து புதுச்சேரி செல்லும் சாலையில், இரண்டாவது கிலோ மீட்டரில் இறையானூர் என்னும் கிராமத்தில் தரமான விதை உற்பத்திக்குத் தேவையான ஆராய்ச்சியோடு, விதை உற்பத்தியும் செய்து விவசாயிகள் மத்தியில் 78 ஆண்டு காலமாக சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது இந்நிலையம். "தமிழ்நாடு முழுவதும் பல பகுதிகளில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டாலும், பழைய தென்னாற்காடு, வடஆற்காடு மாவட்டங்களில்தான் அதிகளவு மானாவாரியாக எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. இதனால்,1935-ம் வருடம் பலாக்குப்பம் என்ற கிராமத்தில் எண்ணெய் வித்துப் பயிர்கள் பற்றி ஆய்வு செய்வதற்காக 'வேளாண் ஆராய்ச்சி நிலையம்' துவங்கப்பட்டது. இது, 62-ம் வருடம் 'மண்டல ஆராய்ச்சி நிலையம்' என்று தரம் உயர்த்தப்பட்டு, 82-ம் வருடத்திலிருந்து வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ்' எண்ணெய் வித்துப் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையம் என்று செயல்பட்டு வருகிறது. இங்கு, மானாவாரி நிலங்களுக்குத் தேவையான எண்ணெய் வித்துப்பயிர்கள் பற்றிய ஆராயச்சிகளும், விதை உற்பத்தியும் செய்கிறோம். மேலும், 2004-ஆம் ஆண்டு முதல் இரண்டு வருட வேளாண் பட்டயப் படிப்பையும் பல்கலைக் கழகத்தின் கீழ் நடத்தி வருகிறோம் என்றார் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் வைத்தியநாதன். ஆரம்பத்தில், 150 ஏக்கர் நிலம் இந்த மையத்திற்குச் சொந்தமாக இருந்தது. 2004-ம் ஆண்டு முதல் கே.வி.கேயும் இந்த மைத்தில் செயல்பட்டு வருவதால், அதற்கு 50 ஏக்கர் போக மீதியுள்ள 100 ஏக்கர் நிலத்தில் எங்கள் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. இதுவரை 13 நிலக்கடலை ரகங்கள், 7 எள்

ரகங்கள் 6 தேர்வு செய்யப்பட்ட ஆமணக்கு ரகங்கள் மற்றும் ஒரு வீரிய ஒட்டு ரகம், ஒரு உளுந்து ரகம், ஒரு காராமணி என மொத்தம் 29 ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றார்.

கொடிக்கடலை ரகத்தை விரும்பாத விவசாயிகள்!

நிலக்கடலை ரகங்களைப் பொருத்தவரை கொடிக்கடலை. கொத்துக்கடலை என இரண்டு வகைகள் உண்டு. இவற்றில் டி.எம்.வி1 என்ற கொடிக்கடலை ரகத்தின் வயது 135 நாட்கள். ஒரு ஏக்கர் நிலத்தில் விதைக்க 45 கிலோ விதைப்பருப்பு தேவைப்படும். அறுவடை செய்து காய வைக்கப்பட்ட பிறகு, ஏக்கருக்கு 600 முதல் 700 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும். மானாவாரிப் பட்டத்துக்கு ஏற்ற இந்த ரகம், தென்மேற்குப் பருவமழை சரியாக பெய்த காலத்தில் விவசாயிகளால் அதிகளவில் விரும்பி சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் வைகாசி மாதம் துவங்க வேண்டிய மழை, ஆடியில் துவங்குவதால்... விதைப்பு காலம் தள்ளிப் போகிறது. இதனால், காய் முற்றும் காலமான ஐப்பசி மாதத்தில் பெய்யும் மழையில், காய் முழுமையாக முற்றாமல் மகசூல் குறைந்து விடுகிறது. இதனால், தற்போது இந்த கடலை ரகத்தை சங்ககிரி பகுதி விவசாயிகளைத் தவிர, மற்ற பகுதி விவசாயிகள் விரும்புவதில்லை.

மானாவாரிக்கு ஏற்ற டி.எம்.வி-2

கொத்துக்கடலை ரகங்களில் டி.எம்.வி2, டி.எம்.வி-7, டி.எம்.வி-10, டி.எம்.வி-13 ஆகிய ரகங்கள்தான் அதிகமகாகப் பயிரிடப்படுகின்றன. இந்த ரகங்களில் ஏக்கருக்கு 55 கிலோ முதல் 60 கிலோ விதை தேவைப்படும்.

டி.எம்.வி-2.: இதன் சாகுபடிக் காலம் 105 நாட்கள். இந்த ரகத்திற்கு 'பட்டாணி' என்ற பெயரும் உண்டு. மானாவாரிக்கு ஏற்ற சிறந்த ரகம். அதிகமான வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை, முளைப்புத் திறன், நல்ல உடைப்புத் திறன் கொண்ட ரகம். இந்த ரகத்தின் விதைகளைத்தான் அதிகளவில் ஒட்டுக்கட்டுவதற்கு பயன்படுத்துகின்றனர். இந்த ரகத்தை திருத்தணி, ஆந்திரா மாநிலங்களில் விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்கிறார்கள். மானாவாரியில் ஏக்கருக்கு 600 கிலோ முதல் 800 கிலோ அளவுக்கு (காயவைக்கப்பட்ட பிறகு) மகசூல் கொடுக்கும்.

டி.எம்.வி.-7 : இறவை (கார்த்திகைப் பட்டம்) மற்றும் மானாவாரி (ஆடிப்பட்டம்) பட்டங்களுக்கு ஏற்ற ரகம். இதன் வயது 105 நாட்கள். விதைகள் இளஞ்சிவப்பு நிறத்திலும், காய்களில் சுமார் 70% பருப்புகள் உடையதாகவும் இருக்கும். மானாவாரியில் ஒரு ஏக்கருக்கு 600 கிலோ முதல் 800 கிலோவும், இறவையில் 1,000 முதல் 1,100 கிலோ வரையும் மகசூல் எடுக்கலாம். டி.எம்.வி-2 ரகத்தின் காய்களில் இடுப்புப் பகுதி உள்ளே சென்றும், டி.எம்.வி-7 ரகத்தில் காய்களின் இடுப்பு பகுதி பூசி மெழுகியது போன்றும் இருக்கும்.

டி.எம்.வி10: இது, அடர்கொத்து வகையைச் சேர்ந்தது. மானாவாரிக்கு ஏற்ற ரகம். இதன் விதை, சிவப்பு நிறத்தில் வெள்ளைக் கோடுகளோடு இருக்கும். இந்த ரகத்திற்கு 'நாமகொட்டை' என்ற பெயரும் உண்டு. 42 முதல் 45 சதவிகிதம் மட்டுமே எண்ணெய்சத்து இருப்பதால், அதிகளவில் பருப்புக்காக விரும்பி வாங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 600 முதல் 800 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும்.

டி.எம்.வி.13 : இது, சிவப்பு நிறம் கொண்டது. இதற்கு 'பொள்ளாச்சி சிவப்பு' என்கிற பெயரும்

உண்டு. மானாவாரி மற்றும் இறவைப் பட்டத்துக்கு ஏற்றது. இந்த ரக பருப்புகளில் அதிக அளவுக்கு எண்ணெய் சத்து உள்ளதால், எண்ணெய் நிறுவனங்களால் விரும்பி வாங்கப்படுகிறது. இந்த ரகத்தை, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் பொள்ளாச்சி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். ஏக்கருக்கு மானாவாரியில் 600 கிலோ முதல் 800 கிலோ வரையும், இறவையில் 1,000 கிலோ முதல் 1,200 கிலோ வரையும் மகசூல் கிடைக்கும்.

பனியில் விளையும் டி.எம்.வி-3 எள்!

எள்ளிலிருந்து ஏழு ரகங்கள் வெளியிடப்பட்டாலும், விவசாயிகள் மத்தியில் டி.எம்.வி-3,டி.எம்.வி-7, ஆகிய ரகங்கள் மட்டுமே பிரபலமாக இருக்கின்றன. ஏக்கருக்கு இரண்டு கிலோ விதை போதுமானது. டி.எம்.வி.3 எள் ரகம்: அடர் கருப்பு நிறம் கொண்டது. இதன் வயது 80 முதல் 85 நாட்கள். இறவைப் பட்டத்துக்கும் (கார்த்திகைப் பட்டம்), குளிர் காலத்துக்கும் ஏற்றது. நல்லெண்ணெய்க்கு உரிய பாரம்பரியமான குணங்கள் அதிகமாக இருப்பதால், வீடுகளில் எண்ணெய் உற்பத்தி செய்பவர்கள் அதிகமாக விரும்புகிறார்கள். ஏக்கருக்கு 300 கிலோ முதல் 350 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

டி.எம்.வி.4 மற்றும் டி.எம்.வி6 ரகங்கள் :

இவை இறவைப் பட்டத்திற்குப் (பங்குனி முதல் சித்திரை வரை) ஏற்றவை. இதன் வயது 85 முதல் 90 நாட்கள். ஏக்கருக்கு 300 கிலோ முதல் 350 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும். டி.எம்.வி.5 ரகத்தின் விதைகள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இதன் வயது 80 முதல் 85 நாட்கள். இந்த ரகத்தை மார்கழி மாதத்தில் விதைத்தால்... பனியிலேயே வளர்ந்து வந்து விடும். ஏக்கருக்கு 200 கிலோ முதல் 250 கிலோ வரை விளைச்சல் இருக்கும்.

டி.எம்.வி.7 ரகம்: மாசிப்பட்டம், ஆடிப் பட்டம் மற்றும் கார்த்திகைப் பட்டங்களுக்கு ஏற்றது. இதன் வயது, 85 முதல் 90 நாட்கள். மானாவாரிப் பட்டத்தில் ஏக்கருக்கு 300 கிலோ முதல் 350 கிலோவும். இறவைப் பட்டத்தில் ஏக்கருக்கு 350 கிலோ முதல் 400 கிலோ வரையும் மகசூல் கிடைக்கும்.

அதகி மகசூலுக்கு டி.எம்.வி.சி.ஹெச்.1 ஆமணக்கு

ஆமணக்கில் மொத்தம் 7 தேர்வு செய்யப்பட்ட ரகங்களும், ஒரு வீரிய ஒட்டு ரகமும் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. இதில், டி.எம்.வி-2, டி.எம்.வி-5, டி.எம்.வி-6 மற்றும் டி.எம்.வி.சி.ஹெச்-1 என்ற ரகங்கள்தான் அதிகளவு பயிர் செய்யப்படுகின்றன.

டி.எம்.வி.2 ரகம் : இது, 210 நாட்கள் வயது கொண்ட நீண்டகால ரகம் மானாவாரியில், ஊடுபயிருக்கு ஏற்றது. ஏக்கருக்கு ஐந்து கிலோ விதை போதுமானது. 300 கிலோ முதல் 400 கிலோ மகசூல் கொடுக்கும்.

டி.எம்.வி-5: இதன் வயது 120 நாட்கள். இந்த ரகம் அதிக வறட்சியைத் தாங்கி வளரும். இலைகளில் சாம்பல் போன்று படிமங்கள் உள்ளதால், பூச்சி எதிர்ப்புத் திறன் கொண்டது. இதை வேலிப்பயிராக சாகுபடி செய்யும்போது, பூச்சி, நோய் தாக்குதல் குறைவாக இருக்கும். காய்களும் கொத்துகளில் அடர்த்தியாக இருக்கும்.

டி.எம்.வி:6 : இதன் வயது 160 நாட்கள். டி.எம்.வி-5 மற்றும் 6 ஆகிய இரண்டு ரகங்களையும்

தனிப்பயிரக சாகுபடி செய்யலாம். ஏக்கருக்கு 300 கிலோ முதல் 400 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும்.

டி.எம்.வி.சி.ஹெச்-1 : இது, வீரிய ஒட்டு ரகம் 135 நாட்கள் வயது கொண்டது. தனிப்பயிருக்கு ஏற்ற ரகம். ஏக்கருக்கு 500 கிலோ முதல் 600 கிலோ வரை மகசூல் கிடைக்கும். மதிப்புக்கூட்டலுக்கு ஏற்ற காராமணி

டி.எம்.வி1 என்ற உளுந்து ரகமும், டி.எம்.வி (எம்.பி)1 என்ற காராமணி ரகமும் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

டி.எம்.வி1 உளுந்து : இதன் வயது 65 நாட்கள்.ஆடிப்பட்டம் மற்றும் கார்த்திகைப் பட்டங்களுக்கு ஏற்றது. ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை போதுமானது. கொத்துக் கொத்தாக காய்க்கும் திறன் கொண்டது. ஒரு ஏக்கருக்கு 400 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும்.

டி.எம்.வி (எம்.பி).-1 காராமணி : இந்த ரகத்தின் வயது 60 நாட்கள். ஒரு ஏக்கருக்கு 6 கிலோ விதை தேவைப்படும். கார்த்திகைப் பட்டத்தில் கிடைக்கும் பனியிலேயே நன்றாக வளரும் திறன் கொண்டது. மதிப்புக்கூட்டல் பொருட்களைத் தயாரிப்பதற்கு அதிகளவு இந்தக் காராமணி பயன்படுத்தப்படுவதால், ஒரு குவிண்டால் 5 ஆயிரம் ரூபாய் முதல் 7 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகின்றது. ஒரு ஏக்கருக்கு 300 கிலோ முதல் 400 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும்.

நிறைவாகப் பேசிய வைத்தியநாதன், எங்கள் மையத்தில், கரு விதை மற்றும் வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்து அரசுத் திட்டங்களுக்கும், பல்கலைக் கழகத்திற்கும் கொடுத்த வருகிறோம். மேலும், பண்ணையிலே விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை விற்பனை செய்கிறோம். தேவைப்படும் விவசாயிகள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**விலைப் பட்டியல்**

| | |
|---|---|
| எள் விதை | - ரூ.70 (ஒரு கிலோ) |
| நிலக்கடலை | - ரூ.70 (ஒரு கிலோ) |
| உளுந்து | - ரூ.90 (ஒரு கிலோ) |
| ஆமணக்கு | -ரூ.100 (ஒரு கிலோ) |
| காராமணி | -ரூ.50 (ஒருகிலோ) |

தொடர்புக்கு
எண்ணெய்வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம்,
திண்டிவனம். தொலைபேசி : 04147 -250293

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.07.13** www.vikatan.com